## திராவிட இயக்க இதழ்கள் - ‘அலை ஓசை’




தி.மு.க.வின் கொள்கைகளைப் பரப்பும் எண்ணத்துடன் ஆற்காடு வீராசாமி, கிளியனூர் வெங்கடசுப்பு ரெட்டியார் ஆகியோரின் ஒத்துழைப்போடு வேலூர் நாராயணன் என்பவரால் தொடங்கப்பட்ட இதழ் ‘அலை ஓசை’.

நாராயணன், அடிப்படையில் வழக்குரைஞர். 1965-இல் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டையில் சிறைவாசம் அனுபவித்தவர். பின்னர், 1968-1969 காலகட்டத்தில் சென்னை மேயராகவும் பதவி வகித்தவர்.

இந்த இதழ், 1971-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11-இல் தொடங்கப்பட்டது. இதில் அரசியல், பொதுச் செய்திகள், தொடர்கதைகள், தொடர் கட்டுரைகள் உள்ளிட்ட படைப்புகள் வெளிவந்துள்ளன. 1992-ஆம் ஆண்டு வரை இந்த இதழ் வெளிவந்தது. நாராயணன் தி.மு.க தலைவராக அறியப்பட்டு இருந்தாலும், அனைத்துக் கட்சி செய்திகளுக்கும் இடமளித்து, யாரையும் இருட்டடிப்புச் செய்யாமல் இதழை நடத்தினார். அதனால்தானோ என்னவோ அந்த இதழின் முதல் பக்கத்தில், உள்ள பெயருக்குக் கீழே ‘நடுநிலை நாளிதழ்’ என்று துணிச்சலாக அச்சிட முடிந்தது.

இந்த இதழில், ஜெயகாந்தன், நா.பார்த்தசாரதி, கண்ணதாசன், பழ.நெடுமாறன், முரசொலி அடியார், வலம்புரி ஜான், விருதுநகர் சீனிவாசன், அறந்தை நாராயணன் எனப் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் பலர் எழுதியுள்ளனர்.

## :ப்ளாஷ்பேக்



### தளபதி முன்னிலையில் இணைந்தனர்!



தா.காயின்குமார்

1995-ஆம் ஆண்டு கழக இளைஞர் அணி நிகழ்ச்சியில் பங்கேற்க, கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் தொகுதி சிறுமுகை பேரூராட்சிக்கு வருகை தந்தார் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள். அப்போது எங்கள் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர், தளபதி அவர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அப்போதைய மாவட்டக் கழகச் செயலாளர் ஐயா பொங்கலூர். நா.பழனிசாமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பா.அருண்குமார், பேரூர் கழகச் செயலாளர் டி.சோமு ஆகியோர் உடனுள்ளனர்.

**– தா.காயின்குமார், கிளைச்செயலாளர், சிறுமுகை பேரூர், கோவை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நீதிக்கட்சியில் மாற்றங்கள்!


1932-ஆம் ஆண்டு, நீதிக்கட்சித் தலைவர் முனுசாமி நாயுடு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது தொடர்பாக, தஞ்சையில் கூடிய மாநாட்டில் பொப்பிலி அரசர் கட்சியின் தலைவராகவும் முறைப்படி முதல் மந்திரியாகவும் பொறுப்பேற்றுக் கொண்டார். மூன்று ஆண்டு காலமே இந்த ஆட்சி நடைபெற வேண்டுமெனினும், சைமன் கமிசனுடைய அறிக்கை வெளிவர, காலம் தாழ்ந்ததால் இந்த ஆட்சி ஏழு ஆண்டுகள் நீடித்தது.

# மாநாடு

**ர.பிரகாசு** **32**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : கி.சொக்கலிங்கம்



# ஓங்கி ஒலித்த உரிமையும் உணர்ச்சியும்!

இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக 1916-ஆம் ஆண்டில் செம்ஸ்போர்டு நியமிக்கப் பட்டார். 1917-ஆம் ஆண்டில் எட்வின் மாண்டேகு இந்தியாவின் அரசுச் செயலாளர் ஆனார். 1918-ஆம் ஆண்டு மாண்டேகு, செம்ஸ்போர்டு இருவரும் சேர்ந்து, அரசியல் சாசன சீர்திருத்தங்களுக்கான திட்டத்தை உருவாக்கினர். அதற்காக இந்தியா முழுவதும் பயணப்பட்ட மாண்டேகு, சென்னையில் 7 நாட்களுக்கு மேல் தங்கியிருந்து கருத்துக்களைக் கேட்டறிந்தார். “பார்ப்பனர் அல்லாதோருக்கு தனி வாக்குரிமையுடன் கூடிய அரசியல் சீர்திருத்தம் தரப்படவேண்டும்” என்று நீதிக்கட்சி சார்பில் டாக்டர் டி.எம்.நாயர், டாக்டர் நடேசனார், திவான் பகதூர் இராஜரத்தின முதலியார், பனகல் அரசர் உள்ளிட்டோர் மாண்டேகுவிடம் கோரிக்கை அளித்தனர்.

இறுதியில், இந்திய அரசியலமைப்பு மற்றும் வகுப்புவாதங்களைக் களைதல் குறித்து, 300 பக்கங்கள் கொண்ட ஒரு அறிக்கை இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அறிக்கை வெளியானது. மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களை நீதிக்கட்சி வரவேற்றாலும், வகுப்புரிமை தரப்படவில்லை என்ற குறையும் இருந்தது. இது பார்ப்பனரல்லாத மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்றும் கருதியது. இங்கிலாந்து மக்களின் நம்பிக்கையைப் பெற்றால் மட்டுமே பார்ப்பனரல்லாத மக்களுக்கான வகுப்புரிமையைப் பெற முடியும் என்று திடமாக நம்பினார் டி.எம். நாயர். அதற்காக, 01.06.1918 அன்று தனது சொந்த செலவில் இங்கிலாந்து புறப்பட்டார்.

**அரசியல் துறையிலும், மற்ற துறைகளிலும் போதிய பங்கும் அதிகாரமும் பெறும் வரையில், பார்ப்பனரல்லாதோர் தனிவாக்குரிமை உடையவர்களாய் இருந்தேயாக வேண்டும்!**

அந்த சமயத்தில் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்த அறிக்கை பற்றி விவாதிப்பதற்காக நீதிக்கட்சி 2 முக்கிய மாநாடுகளைக் கூட்டியது. அதில் முதல் மாநாடு 20.10.1918-இல் நடைபெற்றது. அப்போது டி.எம்.நாயர் இங்கிலாந்தில் இருந்தார். சர்.பிட்டி தியாகராயர் தலைமையில் இம்மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக புதுக்கோட்டை அரசர் கே.எஸ். துரைராசா நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால், அவருக்கு உடல்நலம் குன்றியிருந்ததால், வி.திருமலைப்பிள்ளை வரவேற்புரை வாசித்தார். சென்னை மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் நீதிக்கட்சியின் தொண்டர்கள், தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்றனர்.

மாநாட்டில் மாண்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்த அறிக்கையை விளக்கி, தியாகராயர் நீண்டதொரு உரையாற்றினார். குறிப்பாக, “பார்ப்பன ரல்லாதோரே பெரும்பான்மை மக்கள் என்பதை மாண்டேகும், செம்ஸ்போர்டும் நன்கு தெரிந்திருந்தும், பார்ப்பனரல்லாத மக்களைத் தேடி கண்டுபிடிக்கும் நிலையில்தானே இன்றும் இருக்கிறீர்கள்? சட்டசபை போன்ற பிரதிநிதித்துவ சபைகளில் பார்ப்பனரல்லாதோர் பெரும்பான்மையாக இல்லையே! அரசு அலுவலகங்களில் பெரும் பான்மை உத்தியோகங்களில் பார்ப்பன ரல்லாதோர் இல்லையே! கல்வித்துறையிலும் சமுதாயத் துறையிலும் அரசியல் துறையிலும், மற்ற துறைகளிலும் போதிய பங்கும் அதிகாரமும் பெறும் வரையில், பார்ப்பனரல்லாதோர் தனிவாக்குரிமை உடையவர்களாய் இருந்தேயாக வேண்டும்” என்று உணர்ச்சிபொங்க பேசினார், தியாகராயர்.

இங்கிலாந்திலே டி.எம்.நாயர் வகுப்புரிமைக் காக ஆங்கிலேயர்களிடம் உரிமைக் குரல் எழுப்பிக்கொண்டிருந்த வேளையில், பார்ப்பனரல்லாத மக்களின் உணர்வலைகளைத் தட்டி எழுப்பும் வகையில் இருந்தது தியாக ராயரின் பேச்சு. நீதிக்கட்சியின் வகுப்புவாரி உரிமைக் கொள்கைக்கு மகத்தான ஆதரவை திரட்டிய கையோடு, 07.01.1919 அன்று இங்கிலாந்தில் இருந்து நாடு திரும்பினார் டி.எம்.நாயர். அவர் சென்னை திரும்பிய சில நாட்களில் மீண்டும் ஒரு மாநாட்டைக் கூட்டியது நீதிக்கட்சி. அதை வரும் வாரம் காண்போம்.

**...கூட்டம் திரளும்**

# பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** **32**

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




# அடித்தட்டு மக்களின் காவலர்!

“இதயமெல்லாம் பூரிக்கின்ற நாள். நீண்ட நெடுநாளைய கனவு நிறைவேறுகின்ற நாள்.” என்று டாக்டர் அம்பேத்கர் பல்கலைக்கழகத் தொடக்க விழாவின் போது, தனது உரையைத் தொடங்கினார் முத்தமிழறிஞர் கலைஞர். அரசியல் விடுதலையைவிடவும், சமூக விடுதலையைப் பிரதானமாகக் கருதிய திராவிட இயக்கத்தோடு அண்ணல் அம்பேத்கரையும் இணைத்து சமூகநீதி அரசியலுக்கு முழுவடிவம் அளித்தவர் கலைஞர்.

முதுகுளத்தூர் கலவரம், கீழ்வெண்மணி சம்பவம், மீனாட்சிபுரம் பெருந்திரள் மதமாற்றம், விழுப்புரம் சாதிக் கலவரம், தர்மபுரிக் கலவரம் எனச் சாதிய வன்முறைகளும் பதற்றங்களும், தமிழ்நாட்டை சூழ்ந்தபோதெல்லாம் அவர் மிக உறுதியாக ஒடுக்கப்பட்டவர்களின் தரப்பில் நின்று, எதிர்வினையாற்றி இருக்கிறார். அத்தகைய சமூகநீதிக் காவலரின் நூற்றாண்டு நிறைவு பெற்றிருக்கும் தருணத்தில் வெளியாகி இருக்கிறது ‘நீலச்சட்டைக் கலைஞர்’ நூல். பேராசிரியர் மணிகோ. பன்னீர் செல்வம் இந்நூலை ஆழமும் விரிவும் கொண்ட பார்வையோடு எழுதி இருக்கிறார். அய்யுறு ஆராய் பதிப்பகம் 208 பக்கங்கொண்ட இந்நூலை வெளியிட்டுள்ளது.

இரண்டு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலில், முதல் பகுதியில் கலைஞர் தலித் மக்களின் உரிமைகளுக்காக, முன்னின்று எடுத்த முயற்சிகளைக் கோட்பாடாக விளக்கியுள்ளார் இந்நூலாசிரியர்.

**“திராவிட இயக்கத்தை இடைநிலைச் சாதிகளின் கூடாரமாகச் சித்தரிக்க முயலும் திரிபுவாதிகளுக்கு, இந்த 22 கட்டுரைகளும் நேரடி பதிலைத் தெரிவிக்கின்றன.”**

“திராவிட இயக்கத்தின் வரலாற்றுத் தொடர்ச்சியாக ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக, கலைஞர் மேற்கொண்ட முற்போக்கு நடவடிக்கைகள் அனைத்தும் ஆரியத்தால் ஏற்பட்ட ஈராயிரம் ஆண்டு வடுவை ஆற்றுவதற்கு உதவிய ஓயா சிகிச்சைகள்” என்கிறார்.

ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்கான விடுதிகள் பெருக்கம், தாட்கோ கடன், இட ஒதுக்கீட்டு அளவை உயர்த்துதல், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் சட்டம், கலைக் கல்லூரிகள், சட்டப் பல்கலைக்கழகங்களுக்கு அம்பேத்கர் பெயரிடல், பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் அமைத்தது, அருந்ததியர் உள் ஒதுக்கீடு என்று தலித் சமுதாய மக்களுக்காக, கலைஞர் எடுத்து வைத்த சமத்துவம் நோக்கிய பாதைகளைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். இவற்றையெல்லாம் ஓர் ஆட்சியாளராகவும் அரசியல் தலைவராகவும் இருந்து அவர் எப்படி நிறைவேற்றினார், அதன் பின்னுள்ள அரசியல் தத்துவம் என்ன? என்பதை விளக்கியுள்ளார் இந்நூலாசிரியர்.

கலைஞர் அவர்களின் இந்தச் சுயமரியாதை-சமூகநீதி-சமத்துவம் நோக்கிய மக்கள் நல அரசியல், பெருஞ்சமய, பெருந்தெய்வ, சனாதன பிற்போக்கு அரசியலுக்கு நேரெதிராக இருந்ததையும் பல்வேறு சான்றுகள் மூலம் விளக்கியுள்ளார்.

இரண்டாவது பகுதி தலித் மக்களின் உரிமைக்காக, கலைஞர் ஆற்றிய உரைகள், அது தொடர்பாக உடன்பிறப்புகளுக்கு அவர் தீட்டிய கடிதங்கள் அடங்கிய 22 கட்டுரைகளைப் பின்னிணைப்புகளாகக் கொண்டிருக்கிறது. திராவிட இயக்கத்தை இடைநிலைச் சாதிகளின் கூடாரமாகச் சித்தரிக்க முயலும் திரிபு வாதிகளுக்கு, இந்த 22 கட்டுரைகளும் நேரடி பதிலைத் தெரிவிக்கின்றன.


அருந்ததியர் உள்ஒதுக்கீடு போன்ற அசைக்க முடியாச் சட்டங்களை அடித்தட்டு மக்களுக்காகத் தீட்டிய கலைஞர் அவர்களை நன்றியுடன் பலர் நினைவுகூர்ந்து வரும் இந்தத் தருவாயில், சாதியத்தை அவர் எதிர்கொண்ட விதத்தையும், விளிம்புநிலை மக்களின் உரிமைக்காக அவர் ஆற்றிய பணிகளையும் ஒருசேர வாசகர்களுக்குக் கொண்டு சேர்க்கிறது இந்நூல்.

**...வாசிப்போம்.**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

**623**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.